RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.34256/ijot2136

# பெருந்தொற்றின் அனுபவங்களோடு தகவமைக்கப்பட்டுள்ள கிழக்கிலங்கைப் பத்ததிச் சடங்குகள்: ஓர் ஆய்வு

து. கௌரீஸ்வரன் [அ,*]

[அ] நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# A research study on Local Rituals of Eastern Sri Lanka that was appropriated according to Pandemic

T. Gowrieeswaran [a,*]

[a] Department of Fine Arts, Eastern University, Sri Lanka.
*Corresponding author Email: gowriees@gmail.com
DOI: https://doi.org/10.34256/ijot2136
Received: 02-07-2021; Revised: 31-07-2021; Accepted: 01-08-2021 Published: 05-08-2021

**Abstract:** This study deals with the annual ritual practices of Eastern Sri Lanka and how the ritual practices were determined, designed and redesigned time to time according to the natural disaster of Pandemics. The order of the existing local ritual practices are particularly designed and constructed in order to get rid from smallpox. Literature of local ritual practices are rich in information and instruction of the pandemic, smallpox. Oral traditions carries plenty of experiences and stories about the pandemic particularly during local ritual ceremonies. Period, atmosphere and behavior of people in ritual ceremony and the things utilized and consumed particularly the food habits exhibit the experiences of a pandemic they underwent and designed or redesigned the ritual ceremony to get rid from the catastrophe.

**Keywords:** Local Rituals, Pandemic, Smallpox, Appropriation, Texts (oral and literary).

## முன்னுரை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மனிதக் குழுமங்களின் பண்பாட்டு அசைவியக்கத்தில் பெருஞ்செல்வாக்குச் செலுத்தி வரும் விடயமாக இம்மனிதக் குழுமங்களால் வருடத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டு வரும் சடங்கு விழாக்கள் விளங்கி வருகின்றன. கிழக்கிலங்கையில் மனிதர்கள் சமுதாயக் குழுமங்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். ஒவ்வொரு சமுதாயங்களினதும் குழும அடையாளங்களை வலுப்படுத்தி இயக்கங்கொள்ளச்செய்யும் களங்களாக வருடாந்தச் சடங்கு விழாக்கள் நடைபெறும் கோயில் வெளிகள் விளங்கி வருகின்றன. நவீனமயமாக்கத்தின் தாக்கத்தினால் ஊரை விட்டும் தம்சமுதாயத்தை விட்டும் தூரவிலகி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள மனிதர்களில் பெரும்பாலானவர்களை வருடத்திற்கு ஒருதடைவையேனும் சமுதாயமாக ஒன்றிணைந்து ஊடாட்டங் கொள்ளச் செய்வதில் இச்சடங்கு விழாக்கள் காத்திரமான தாக்கத்தினைப் புரிந்து வருகின்றன.

கிழக்கிலங்கையில் வாழும் பல்வேறு சமுதாயக் குழுமங்களும் தத்தமக்கான குலதெய்வங்களை மையமாகக்கொண்டு தத்தமக்கான பத்ததிகளை வடிவமைத்து அப்பத்ததிகளுக்கேற்ற விதமாகத் தமது சடங்கு வழிபாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இச்சடங்கு வழிபாடுகளுக்கான நெறிமுறைகள் வரலாற்றின் அனுபவங்களை உள்வாங்கித் தகவமைக்கப்பட்டவைகளாக இருப்பதனை இனங்காண முடிகின்றது. குறிப்பாக கிழக்கிலங்கையின் வரலாற்றில் 'வைசூரி' என்று அழைக்கப்படும் கொள்ளை நோயின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளதை அறிய முடிகின்றது. இக்கொள்ளை நோய் கிழக்கிலங்கையின் சமூகபண்பாட்டு அசைவியக்கத்தில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. வைசூரி நோய் குறித்து பல தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

'கி.பி மூன்றாம் நூற்றாண்டில் குணசிங்க மன்னன் மட்டக்களப்பை ஆண்டு வந்த காலத்தில், கலிங்க நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த உலகநாச்சி என்னும் இளவரசி மண்முனையை இராசதானியாகக் கொண்டு மண்முனைப்பிரதேசத்தை ஆண்டு வந்தாள். சில நூற்றாண்டுகளின் பின் உலகநாச்சி ஆண்டுவந்த மண்முனைப்பிரதேசத்தில் கொடிய வைசூரி நோய் பரவத் தொடங்கி ஏராளமான மக்கள் இறக்கத் தொடங்கினர் இதனால் பயந்த மக்கள் பல ஊர்களுக்கும் இடம்பெயர்ந்தனர்' (Kanapathipillai, 2009).

'1698 அளவில் கண்டியில் கொடிய உயிர்க்கொல்லி நோயான வைசூரி வேகமாகப் பரவியது நோயாளிகள் கைவிடப்பட்டுக் கிடந்தனர், இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூடத் தயங்கினர், உடல்களை காடுகளிலே வீசினர், வசதிபடைத்தோர் இடம்பெயர்ந்து ஓடித்தப்பினர்' (Johnson Rajkumar, 2010)

இந்தக்கொடிய வைசூரி நோயின் தாக்கங்களைக் கருத்திற் கொண்டும் இந்நோய் கொடுத்த படிப்பினைகளை ஆதாரமாகக் கொண்டும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர் சமூகங்களின் பத்ததிச் சடங்குகள் வடிவமைக்கப்பட்டு அல்லது சீர்திருத்தம் செய்யப்பட்டு தொடரப்பட்டு வந்துள்ளமையினை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதனைப் பின்வரும் கூற்று மேலும் விளக்குகின்றது.

'பத்ததிச் சடங்குகள் சொர்க்கம் நரகம் பற்றிப் பேசுவதில்லை மாறாக இந்த உலகத்தில் மனிதர்கள் எவ்வாறு உடல், உளச் சுகாதாரத்துடன் ஆரோக்கியமாக வாழ வேண்டும் எனும் நோக்கத்துடன் இயற்கையினைப் பிரதானப்படுத்தி நடத்தப்பட்டு வரும் நமது உள்ளூர் வழிபாட்டு முறைமையாகவே தொடரப்பட்டு வருகின்றது. வருடத்திற்கு ஒரு தடவை நமது உடல் சுகாதாரத்தையும், உளச் சுகாதாரத்தையும் சீரமைத்து வரும் சடங்குகள் அவ்வப்போது பேரனர்த்தத்தின் சவால்களுக்குள் அகப்பட்ட மனிதர்களுக்கு அத்தகைய அனர்த்தங்களிலிருந்து மீண்டெழுவதற்கான ஆத்ம பலத்தை அதன் செயற்பாடுகள் ஊடாக வழங்கி வந்துள்ளதை கடந்த கால வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்கின்றோம் (Jayashankar, 2020; Joel Spring, 2004)

இந்தவகையில் கிழக்கிலங்கைப் பத்ததிச் சடங்குப்பண்பாட்டில் அவதானிக்கப்படும் பின்வரும் விடயங்களை மையமாகக்கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

1. சிறுகுழுமங்களும் சடங்குப்பண்பாடும்
2. சடங்குகள் நடத்தப்படும் பருவகாலம்
3. சடங்குகள் நடைபெறும் சுற்றுச்சூழல்
4. சடங்கில் பங்குபற்றுவோரின் பண்புகள்
5. சடங்கில் பயன்படுத்தப்படும் பாவனைப் பொருட்கள்
6. சடங்கில் பரிமாறப்படும் உணவு வகைகள்
7. சடங்குப் பாடல்கள்

## (அ) சிறுகுழுமங்களும் சடங்குப் பண்பாடும்

பெருந்தொற்றுக்கள் பொதுவாக நோய்த்தொற்றுக்கு உள்ளான வெவ்வேறு மனிதர்களின் ஒன்றிணைவினூடாகவே பல்கிப்பெருகுகின்றன. இதன்காரணமாகவே பெருந்தொற்றுக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உடனடி வழிமுறையாக தனிமைப்படுத்தல், ஆளாள் இடைவெளிகளைக் கடைப்பிடித்தல் என்பன வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இதன் அடுத்த கட்டமாக நோய்த் தொற்றுக்கு

உள்ளாகாத நன்கு அறிமுகமான சிறு தொகையினராகிய மனிதக் குழுமங்கள் இயல்பு வாழ்வை வாழுதலும் பாதுகாப்பான வழிமுறையாகப் பரிந்துரைக்கப்படுகின்றன. இந்த வகையில் கிழக்கிலங்கையின் பத்ததிச் சடங்குகளும் வருடத்திற்கு ஒரு தடவை நன்கு அறிமுகமான சமூகக்குழுமங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிக்கின்றமையினை அவதானிக்க முடிகின்றது. அதாவது மிகப்பெரும்பாலும் ஓர் ஊரின் உறவினர்கள் ஒன்றிணைந்து தம்குலதெய்வத்திற்கும் விருப்பத்திற்குரிய பிற தெய்வங்களுக்கும் நடத்தும் வருடாந்தச் சடங்கு விழாவாகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒன்றிணைவு ஒரு பெருந்தொற்றுச் சூழலிலும் குறித்த ஒரு சிற்றூரில் வாழும் மனிதர்கள் கூடிச் செயலாற்றுவதற்கான வாய்ப்புக்களை இலகுபடுத்துவதாக இருக்கின்றமையினைக் காண்கின்றோம். ஒரு பெரிய கிராமத்திற்குள் பல்வேறு சமூகத்தினர் வாழும் பொழுது அச்சமூகத்தவர்கள் தாம்சார்ந்த சமூக மட்டத்தில் நுண்ணிய அளவில் தத்தமது சடங்கு வழிபாடுகளை நிகழ்த்தும் வகையில் கிழக்கின் பத்ததிச் சடங்குப் பண்பாடு பரிமாணம் பெற்றுள்ளமையானது காலத்திற்குக் காலம் பரவிய பெருந்தொற்றின் தாக்கங்களால் என்பதையும் நாம் இங்கு உய்த்துணர முடிகின்றது. இத்தகைய சிறு குழுமச் சடங்குத்தன்மை வகுக்கப்பட்டமையினை உறுதிப்படுத்தும் வகையில் மட்டக்களப்பில் வைசூரி நோய் தொடர்பாக செவிவழியாகக் கடத்தப்பட்டு வரும் கதைகள் காணப்படுகின்றன.

உதாரணமாக 'ஒரு காலத்தில் வைசூரி நோய் அதிகமாகப்பரவி பலரையும் கொன்ற நிலையில் இனி இவ்விடத்தில் வாழ முடியாது என்று தாம் நெருக்கமாக வாழ்ந்த ஊர்களை விட்டு மனிதர்கள் சிறு சிறு குழுமங்களாக வெவ்வேறு இடங்களை நோக்கி குடிபெயர்ந்து வாழ முற்பட்ட போது தமது குலதெய்வங்களைத் தாம் குடியேறிய புதிய இடங்களில் வழிபடத் தலைப்பட்டார்கள் அப்போது தாம் ஏற்கெனவே கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டமையினைக் கருத்திற் கொண்டு குறைந்த நாட்களில் வரையறுக்கப்பட்ட அளவினையுடைய ஆட்கள் கூடிச் சடங்கு செய்யும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார்கள்'.

### (ஆ) சடங்குகள் நடத்தப்படும் பருவகாலம்

கிழக்கிலங்கையில் பத்ததிச் சடங்குகள் நடத்தப்படும் பருவ காலமாகப் பெரும்பாலும் வைகாசி, ஆனி மாதங்கள் காணப்படுகின்றன. இக்காலப்பகுதியானது கிழக்கிலங்கையில் வரட்சி அதிகரித்த காலமாகும். வெயிலின் கோரம் பூமியையும் மனிதர்களையும் பாதிப்புறச் செய்யுங் காலமாக விளங்குகின்றது. இத்தகைய வரட்சி மிகுந்த காலத்தில் விளைச்சல் குறைவடைதல், உணவுத்தட்டுப்பாடு உருவாகுதல், இதன்காரணமாக போசாக்கான உணவினைப் பெறுவதில் சிரமங்கள் தோன்றுதல் இவை மனித உடல் சுகாதாரத்தில் பாதிப்புக்களை உண்டுபண்ணுதல் எனப்பல தாக்கங்களை விளைவிக்கவல்லது. எனவே இக்காலத்தில் மனிதர்கள் ஓய்வாகவும் உடல் உளச் சுகாதாரத்திற்கு இசைவாகவும் இயங்க வேண்டியது இன்றியமையாதது ஆகின்றது. இதற்குத் தகுந்த வகையிலேயே மிகப்பெரும்பாலும் கிழக்கிலங்கைச் சடங்குகள் வைகாசி, ஆனி மாதங்களில் சம காலத்திலும் சம நேரத்திலும் சிறுசிறு குழுமங்களாக நடத்தப்படும் வகையில் பரிமாணம் பெற்றுள்ளது. இதனை மட்டக்களப்பு தாமரைக்கேணி மாரியம்மன் கோவிலின் உதவிப்பூசகரான ஜோ.கருணேந்திரா அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

'கிழக்கிலங்கையில் மட்டக்களப்பிலே ஆண்டு தோறும் பல்வேறு பிரதேசங்களிலே இச்சடங்கு விழாக்கள் பெரும்பாலும் வெப்ப காலமாகிய சித்திரை மாதம் தொடங்கி ஐப்பசி மாதம் வரையான காலப்பகுதியிலேயே நடைபெறுகின்றன. இக்காலப்பகுதியை அக்கினி நாட்கள் எனவும் கூறுவர். இக்காலப்பகுதியில்தான் எமது நீர் நிலைகளில் நீர் வற்றும், மழை இராது, வெப்பம் தகிக்கும் எனவேதான் இக்காலப்பகுதியில் மக்கள் மாரியம்மன், காளியம்மன், வைரவர், வீரபத்திரர், பேச்சியம்மன், கண்ணகையம்மன் போன்ற தெய்வங்களுக்கு சடங்கு விழாக்கள் கொண்டாடி மழையை வேண்டி நிற்பர்' (Karunendra, 2007).

பெரும்பாலும் ஆகக்கூடியது ஒன்பது தினங்களும் குறைந்தது மூன்று தினங்களும் ஒரு சமுதாயக் குழுமத்தினர் தமக்கு உரித்தான கோவில் வெளியில் ஒன்று கூடித் தங்கியிருந்து தமது குலதெய்வத்தையும், விருப்புக்குரிய தெய்வங்களையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்து செல்வதாக இச்சடங்கு வழிபாடுகள் காணப்படுகின்றன. சடங்கு நாட்களில் குறித்த ஊரும் அங்கு வாழும்

மனிதர்களும் கோயில் வெளியில் பிற தொடர்புகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு தனிமைப்படுத்தலுக்குள் வாழுகின்றதான நிலைமையே இயக்கம் பெறுகின்றது. இவ்வாறு நோய்த்தொற்றுக்களுக்கு வாய்ப்பான தட்பவெப்ப காலத்தில் அதற்குத் தகுந்த வகையில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உபாயமாக சடங்கு வழிபாடுகள் வகுக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்களுள் ஒன்றாக கொடிய நோய்களின் அனுபவங்கள் இருந்துள்ளன என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

### (இ) சடங்குகள் நடைபெறும் சுற்றுச்சூழல்

கிழக்கில் சடங்குகள் நடத்தப்படும் கோவில்களின் சுற்றுச்சூழல் மிகப்பெரும்பாலும் இயற்கையான, சூழலுக்கு நட்பான வெளிகளாகவே காணப்படுகின்றன. ஆல், அரசு, வேம்பு, மதுரை, கொக்கட்டி, புன்னை, தேத்தா, நாவல், காஞ்சுர, பாலை, ஆத்தி, குருந்தை, கொன்றை, வில்வை முதலான பெருமரங்கள் நிறைந்த நிழற்சோலைகளாகவும், அருகே நீர்த்தேக்கங்களைக் கொண்ட இடங்களாகவும் காணப்படுகின்றன. சடங்கு நாட்களில் இத்தகைய விருட்சங்களின் கீழ் படுத்துறங்குதல், ஓய்வாக இருத்தல், உறவினர்களுடன் அளவளாவுதல் என்பன உடல், உளரீதியான சுகாதாரத்தை மேம்படுத்துவதாக இயக்கம் பெற்று வருகின்றன. இதன் காரணமாகவே சடங்கு நாட்களில் மக்கள் பெருவிருப்பத்துடன் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். பேரனர்த்தங்கள் விளைவிக்கும் நீண்டகால உளத்தாக்கங்களிலிருந்து மனிதர்கள் தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஆற்றுப்படுத்தல் களங்களாக இச்சுற்றுச் சூழலில் வாழுதலும் செயற்படுதலும் அமையக் கூடியது என்பதை உணர்ந்து சடங்கு வழிபாட்டிடங்களும் அவற்றுக்கான சுற்றுச் சூழலும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம்.

### (ஈ) சடங்கில் பங்குபற்றுவோரின் பண்புகள்

பத்ததிச் சடங்குகள் மனிதர்களால் கூட்டாகச் செய்யப்படுவதாக இருந்தாலும் அச்சடங்கில் பங்குபற்றும் நபர்களில் பெரும்பாலானவர்கள் சடங்கு காலத்தில் தனித்திருத்தல் எனும் ஒழுக்கத்துடனேயே காணப்படுகின்றார்கள். சடங்கில் பிரதான பங்குவகிக்கும் பூசகர்கள், தேவாதிகள், தொண்டர்கள், நிருவாகிகள் எனப்பலரும் குறித்த சடங்கு நாட்களில் தமது வீடுகளை விட்டு வெளியேறி கோவில் வளாகத்தில் வாழுபவர்களாகவே காணப்படுகின்றார்கள். கோவிலுக்கு வந்தால் எல்லையை விட்டு வெளியேறக் கூடாது எனும் நியதி பெரும்பாலும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. கோவிலுக்கு வரும் தமது பிள்ளைகளுடன் கூட நெருக்கமாகப் பழகாதவர்களாகவே இந்நாட்களில் இவர்கள் வாழுகின்றார்கள். இதுவொரு தெய்வக்கடமையாக நம்பப்படுகின்றது. இந்த நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கும் உண்மை என்னவென்றால் தனித்திருத்தல் எனும் நடவடிக்கையாகும் குறிப்பாக நோய்கள் பரவுவதற்குச் சாதகமான பருவகாலத்தில் குடும்ப உறுப்பினர்கள் தனித்திருத்தலை சாத்தியமாக்குவதாக இந்நடவடிக்கை காணப்படுகின்றது.

சடங்கில் பங்குபற்றும் மேற்படி நபர்கள் சடங்கு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது ஒரு நாளைக்கு பல முறை நீராடும் காரியங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். சடங்கு தொடங்கும் முன், சடங்கின் தொடக்கத்தில், சடங்கின் பின்னர் எனப்பல தடவைகளில் இவர்கள் தமது உடலைச் சுத்தமாக்கிக் கொள்வார்கள். இவர்கள் பயன்படுத்தும் ஆடைகளும் தோய்த்து உலர்ந்த ஆடைகளாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

காற்றுப்புக முடியாத அடைக்கப்பட்ட கோவிலின் உட்பகுதிகளுக்குச் செல்வோரும் கூடாரங்களில் நெருக்கமான இடங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ளுவோரும் வாய்ச்சீலை கட்டிக்கொள்வது என்பது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வாய்ச்சீலை என்பது ஒருவர் தனது மூக்கையும் வாயினையும் ஒரு துணியால் மூடிக்கட்டுவதனையே குறிக்கின்றது. அதாவது ஒருவரிடமிருந்து வெளிவரும் மூச்சுக்காற்று, எச்சில் என்பன மற்றையவரைத் தாக்காத வகையில் இந்த வாய்ச்சீலை கட்டப்படுகின்றது. இத்துடன் விசேடமாக சடங்கிற்கான படையல் பொருட்களை தயாரிக்கும் பணியில் ஈடுபடுவோர் வாய்ச்சீலை கட்டியவாறு தமது கருமங்களைச் செய்ய வேண்டியது இன்றியமையாததாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்விதமான சுகாதார நடவடிக்கைகளை

வடிவமைத்தமைக்கான காரணங்களுள் ஒன்றாக கொள்ளை நோய்களும் அவை விளைவித்த படிப்பினைகளும் இருந்துள்ளன என்பதை மறுக்க முடியாதுள்ளது.

### (உ) சடங்கில் பயன்படுத்தப்படும் பாவனைப் பொருட்கள்

கிழக்கிலங்கைப் பத்ததிச் சடங்கில் பயன்படுத்தப்படும் மிகமுக்கியமான பாவனைப் பொருட்களாக தூய நீரும், வேம்பு இலையும், மஞ்சளும் விளங்கி வருகின்றன. தூய நீரில் வேப்பிலயும் மஞ்சளும் தாக்கமடைந்து வெளிவரும் வாசனை பத்ததிச் சடங்கினை நினைவுக்குள்ளும் உணர்விற்குள்ளும் கொண்டு வருமளவிற்கு சடங்கில் இப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை மூன்றும் பாரம்பரியமான தொற்று நீக்கிகள் என்பது கவனத்திற்குரியது. சடங்கு தொடங்குவதற்கு முன்பாகவே கோவில் வளாகம் வேப்பிலைகளால் அலங்கரிக்கப்படுகின்றன, வேப்பிலைகளால் அமிழ்த்தப்பட்ட நீர் வளாகத்தைச் சுற்றித் தெளிக்கப்படுகின்றது, பத்ததிச் சடங்கின் பிரதான அம்சமாகிய கும்பத்தில் வேப்பிலைகளைப் பயன்படுத்தும் வேப்பிலைக் கும்பமே வைக்கப்பட்டு வருகின்றது. தேவாதிகளின் இடுப்பில் வேப்பிலை சொருகப்படுகின்றது, கைப்பொருளாக வேப்பிலைக் கொத்து பயன்படுத்தப்படுகின்றது. உடல், உள உபாதைகளுடன் திருவாக்குக் கேட்க வருவோருக்கு வேப்பிலையால் தடவப்படுகின்றது, வேப்பிலையும், மஞ்சளும், உள்ளூர்ப் பழங்களும் ஒன்றாகச்சேர்த்து மருந்தாக அருந்தச் செய்யப்படுகின்றது. இத்தோடு அரைத்த மஞ்சள் நீரில் பிசையப்பட்டு தேவாதிகளின் உடலிலும், பக்தர்களின் உடலிலும் தடவப்படுகின்றன.

'பத்ததிச் சடங்குகளில் உள்ளூர் மருந்துகள், முகிலிகள் என்பனவற்றின் பயன்பாடுகள் பிரதானமாக இருந்து வருகின்றன தொற்று நீக்கிகளாக அங்கீகரிக்கப்பட்ட வேம்பு, மஞ்சள், சாம்பிராணி போன்றவற்றின் பாவனைகள், தொற்று நீக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி வாடை எனப்படும் ஒரு வகை மருந்தைத் தயாரித்து வழிபாட்டில் பயன்படுத்துதல் இச்சடங்கு காலங்களில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.' (Jayashankar 2020).

இவ்வாறு பாரம்பரியமான தொற்று நீக்கிகளின் பயன்பாடு பத்ததிச் சடங்கில் பிரபல்யம் பெறுவதற்கு ஆட்கொல்லி நோய்களுக்கு உள்ளான அனுபவங்களே அடிப்படையாக இருந்துள்ளன. விசேடமாக கிழக்கில் ஆட்கொல்லி நோயாகத் தாண்டவமாடிய வைசூரியின் தாக்கத்தினால் உள்ளூர்ச் சடங்குகளில் தொற்றுநீக்கிகளின் பயன்படுத்துகை பிரதானம் பெற்றுள்ளமையினை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

### (ஊ) சடங்கில் பரிமாறப்படும் உணவு வகைகள்

பாணக்கம் பத்ததிச் சடங்கில் பரிமாறப்படும் பிரதான உணவாக இருந்து வருகின்றது. உள்ளூரில் கிடைக்கப்பெறும் பழவகைகள் மற்றும் இளநீர் என்பவற்றைப் பயன்படுத்தி இந்தத் திரவ உணவு தயாரிக்கப்படுகின்றது. சடங்கு காலத்தில் ஏற்படும் சூட்டினைத் தணியச் செய்யும் மருந்தாகவும் பானமாகவும் இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைப் பூசகர் ஜோ.கருணேந்திரா பின்வருமாறு விளக்குகின்றார்.

'பாணக்கம் எனும் மருத்துவ குணமிக்க பானத்தை பொறுத்தவரையில் எமது உடலை வெப்பத்திலிருந்து காக்கிறது மட்டுமல்லாது எமது உடலியக்கத்தையும் சீர் செய்கிறது. பாணக்கத் தயாரிப்பானது பல விதமான பழ வகைகளுடன் குறிப்பாக மா, பலா, வாழை, மாதுளை, அன்னாசி, தோடை, தேசி போன்ற பழங்களுடன் கரும்புச்சாறு, பனங்கற்கண்டு, கற்கண்டு, சர்க்கரை, இளநீர் முதலியவற்றைச் சேர்த்து கலவையாக்கி தயாரிக்கப்படுகிறது. இதில் வெங்காயம் கலக்கப்படல் மிக அவசியமானதாகக் கருதப்படுகிறது. உஸ்ணகாலத்தில் எமது உடலானது உஸ்ணத்தைத் தாங்கவல்லதாக மாற வேண்டின் இந்த பாணக்கமானது மிகச்சிறந்த மருந்தாகும்' (Karunendra, 2007).

### (எ) சடங்குப் பாடல்கள்

பத்ததிச் சடங்குகளின் வழிபாட்டு முறைமையில் பாடல்கள் பிரதானம் பெறுகின்றன. உள்ளூர்ப் புலவர்களால் தத்தமது குலதெய்வங்களுக்காகப் பாடப்பட்ட காவியம், கும்மி, தாலாட்டு, உலா,

விருத்தம், எதிரேற்று, சிந்து, வாழித்தரு, ஊஞ்சல்பாட்டு எனப்பல்வேறு இசை வடிவங்களில் ஆக்கப்பட்டுள்ள பாடல்களை உடுக்கிசைத்துப் பாடித் துதிப்பதாக இவை இடம்பெற்று வருகின்றன. இப்பாடல்களில் கொடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல் எனும் வேண்டுதலும் விழிப்புணர்வும் வலியுறுத்தப்படுவதனைக் காண முடிகின்றது. கிழக்கிலங்கையின் பத்ததிப் பண்பாட்டில் பொதுவாக எல்லோராலும் பாடப்படும் மாரியம்மன் காவியத்தில் (இதனைச் சின்னக்காவியம் எனவும் அழைப்பர்) பின்வரும் வரிகள் பிரதானம் பெறுகின்றன.

'வாதமொடு பித்தம் சிலேற்பனம் கண்ணோய்

பகைதோசமானதொரு நோய் கிரக தீவினைகள்

பாடுபட்டோடும் உன் நாமங்கள் சொன்னால்

அகமகிழ்ந் அஞ்சல் என்றருள் கிருபை புரிவாய்

அனலெனுங் கனல் தணிந்தாள நினையம்மா!' (மாரியம்மன் காவியம் பாடல் எண் 03)

இத்தோடு மட்டக்களப்பு தாளங்குடா கண்ணகியம்மன் மீது பாடப்பட்டுள்ள காவியத்தில்

'...சூழ்கின்ற கைதைநகர் வைசூரி மாற்றுவாய்

துரைராசர் தொழவந்த கண்ணகைத் தாயே!' (தாளங்குடா கண்ணகையம்மன் காவியம் பாடல் எண் 13)

என்றும், மட்டுநகர் எல்லைவீதி நரசிங்க வயிரவர் கோவிலின் மாரியம்மன் மீது பாடப்பட்டுள்ள குளிர்த்திப் பாடலில்

'மானிடர்க்கு ஆதாரம் மகமாரித் தாயிரங்கி

வைசூரி அனல் தணித்து மனம் மகிழ்ந்து - தாயார்

வைசூரி அனல் தணித்து மனம் மகிழ்ந்து' (மாரியம்மன் குளிர்த்திப்பாடல் எண் 97)

எனவும் வைசூரி நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வேண்டுதல்கள் காணப்படுகின்றன இவ்வாறு மேலும் பல்வேறு பாடல் வரிகளை ஆதாரமாகக் காண முடிகின்றது.

## முடிவுரை

கிழக்கிலங்கையின் பத்ததிச் சடங்குகள் பலவற்றினை நேரடியாக அவதானித்தமையின் ஊடாகவும், அவற்றில் பங்குபற்றி வரும் அனுபவங்கள் வாயிலாகவும், இச்சடங்குகளின் உள்ளார்ந்த தத்துவங்களைப் பிரக்ஞைபூர்வமாக உரையாடி வரும் ஆய்வறிவாளர்களுடன் ஊடாட்டம் புரிவதன் மூலமாகவும் பத்ததிச் சடங்குகளின் செல்நெறியிலும் தகவமைப்பிலும் இயற்கைப்பேரிடர்களுள் ஒன்றான தொற்று நோய்களின் அனுபவங்கள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. குறிப்பாக தொற்று நோய்கள் எனும் சவாலிலிருந்து மீண்டெழுந்து வாழ்தலுக்கான சமூகச் செயற்பாடுகளுள் ஒன்றாக இப்பத்ததிச் சடங்குகளும் அவற்றின் பண்பாடும் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

Interview: Kalamohan, K., (2020) age 65, Mattakkaḷappu, Srilanka.

Jayashankar, C., (2020) Suggestions and opinions on the possibility of conducting ten rituals in the time of the Corona empire, maintaining appropriate security measures, Moondravathu Kan Friends Group for Local Knowledge Skills Activities, Mattakkaḷappu, Srilanka.

Johnson Rajkumar, J., (2010) Punitha Joshua's Munivarin vazhkaisuvadugal, Iraiyiyal Kolangal, 24(1,2), page 10.

Kanapathipillai, Mu., (2009) Arul Mozhiyum Araiyurk Kandan, Arayampathy. Availble at: http://arayampathy.lk/kanthaswamikovil/6-06082016

Karunendra, Joe., (2007) Panakkam is an introductory note, Mari Amirthakali Punai solai Mariamman alaya kumbabishekam Special issue, Page 41-42.

Spring, J. (2004). How Educational Ideologies are Shaping Global Society: Intergovernmental Organizations, NGOs, and the Decline of the Nation-State (1st ed.). Routledge. https://doi.org/10.4324/9781410610454

**Acknowledgement**

Nil

**Funding**

This study was not funded by any grant

**Conflict of interest**

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

**About the License**

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

T. Gowrieeswaran, A research study on Local Rituals of Eastern Sri Lanka that was appropriated according to Pandemic, Indian Journal of Tamil, 2(3) (2021) 35-41. https://doi.org/10.34256/ijot2136